Date : 04.08.2026

Dw.1 : ஜெயக்கொடி

Dw.1 மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை

அருள்மிகு இலங்காமணி சாஸ்தா கோவிலை எனக்கு 25 வருடங்களாக தெரியும். அந்த கோவிலில் நான் சாமி கும்பிடுவேனோ என்றால் இல்லை. பருவம் செய்ய போவேன். மேற்படி கோவிலோடு இணைந்து இலங்காமணி சாஸ்தா, மாலையம்மன், பிள்ளையார் கோவில், சிவனைந்த பெருமாள் கோவில், பேச்சியம்மாள் கோவில், தளவாய் மாடன் கோவில், கருப்பசாமி, சப்பாணி மாடன் ஆகிய உபய கோவில்கள் உள்ளன என்றால் சரிதான். இந்த கோவிலில் இருந்து நான் எவ்வளவு தூரம் குடியிருந்து வருகிறேன் என்றால் பக்கத்தில்தான் குடியிருக்கிறேன். ஆரம்பத்தில் மேற்படி கோவில் சிறியதாக இருந்து தற்போது பெரிய கோவிலாக உள்ளது என்றால் சரிதான். நான் தற்போது சங்கரன்குடியிருப்பில் 40 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். வழக்கு போட்டுள்ள வாதி சண்முக சுந்தரத்தை எனக்கு தெரியாது. வழக்கினை மொத்தம் 7 பேர் போட்டுள்ளார்கள் என்ற விவரமும் அவர்கள் என்றும் எனக்கு தெரியாது. மேற்படி 7 வாதிகளும் மேற்படி கோவிலை வழிபட்டு வருகிறார்கள் என்றும் அங்குதான் குடியிருந்து வருகிறார்கள் என்றும் அதை நான் தெரிந்து கொண்டேனா என்றால் விசாரிக்கவில்லை. அந்த பகுதியில் இருக்கும் மக்களுக்கு மட்டும் உள்ள தனிப்பட்ட கோவில் என்றால் சரிதான். வழக்கு எந்த சொத்துக்கு தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்றால் எங்கள் சொத்தின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. எனது மாமனார் தாவாசொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு பட்டா மட்டும்தான் உண்டு என்றால் சரிதான். என் மாமனார் மார்க்கெண்டென் என்ற சண்முக மார்த்தாண்டம் பிள்ளை என்ற நபரிடம் இருந்து கிரையம் வாங்கினார். என் மாமனாருக்கு கிரையம் கொடுத்தவர் பெயரில் கிரைய பத்திரம் எதுவும் கிடையாது என்றால் சரிதான். சண்முக மார்த்தாண்டம் பிள்ளை என்பவரின் தகப்பனார் பண்ணை லெட்சுமண குமாரசுவாமி மார்த்தாண்டம் பிள்ளை என்பவரை எனக்கு தெரியாது. எனது மாமனாருக்கு கிரையம் கொடுத்தவர் ஆரம்பத்தில் மேற்படி கோவிலுக்கு டிரஸ்டியாக இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மாமனாருக்கு கிரையம் கொடுத்த நபர் பெயரில் இருந்த பட்டாவில் கோவில் டிரஸ்டி என்று இருந்தது

என்றால் சரிதான். எனது மாமனாருக்கு கிரையம் கொடுத்த நபர் 1ம் வாதி கோவிலை நிர்வாகம் செய்து வந்த விவரம் எனக்கு தெரியாது. எனது மாமனார் கிரையம் வாங்குவதற்கு கோவில் பெயரில்தான் பட்டா இருந்தது என்றால் தெரியாது. என் மாமனார் கிரையம் வாங்கிய பின்பு பட்டா பெற்று 30 வருடங்கள் இருக்கும். என் மாமனார் கிரையம் வாங்கி சொத்து கோவிலை ஒட்டி கோவிலை சேர்ந்த இடம் என்றால் சரியல்ல. என் மாமனார் பெயரில் பட்டா இருந்ததா என்றால் இருந்தது. என் மாமனார் பெயரில் உள்ள பட்டாவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மாமனார் உயிரோடு இருந்த காலத்தில் தாவா சொத்தை காட்டி அடமான கடன் பெற்றுள்ளாரா என்றால் இல்லை. தாவா சொத்து காலி இடமாகும். மேற்படி சொத்தை என் மாமனார் அனுபவம் செய்ததற்கு கிரைய பத்திரத்தை தவிர வேறு ஆவணங்கள் இல்லை. என் மாமனார் கிரையம் பெற்றதாக சொல்லக்கூடிய சொத்து 1ம் வாதியின் திருக்கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் வாதிதான் 700 ஆண்டுகளாக தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.